செ. கு. எண்: 315 நாள் : 02.12.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 2.12.2013

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், திருவொற்றியூர் நெடுஞ்சாலை அருகே 28.10.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திருவொற்றியூரைச் சேர்ந்த திரு. மாரிமுத்து என்பவரின் மகன் ஜெகன்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், ச.கண்ணனூர் மேற்கு கிராமம், சென்னை – திருச்சிராப்பள்ளி தேசிய நெடுஞ்சாலையில் 29.10.2013 அன்று நடந்து சென்று கொண்டிருந்த ச.கண்ணனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி என்பவரின் மகள் கோகிலா;

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், முகையூர் கிராமம், கிழக்குக் கடற்கரை சாலையில் 30.10.2013 அன்று திண்டிவனம் வட்டம், ஆலங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மணி என்பவரின் மகன் குமரன்;

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், கிளாம்பாக்கம் கிராமம் கூட்டு ரோடு அருகே 31.10.2013 அன்று சாலையை கடக்க முயன்ற கிளாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அஸ்ரப் என்பவரின் மகன் இஸ்ராத்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், பூஞ்சேரி கூட்ரோடு அருகே 2.11.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த சென்னை, ஆலந்தூரைச் சேர்ந்த திரு. ஜெயராமன் என்பவரின் மகன் சரவணன்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், குமுளூர் கிராமம், குமுளூர் – தச்சங்குறிச்சி சாலையில் 2.11.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த மகிழம்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. அங்கமுத்து என்பவரின் மகன் திரு. ராஜ்குமார்;

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், அரசர்கோணம் கிராமம், கொட்டாரம் ஊராட்சி அலுவலகம் அருகே 3.11.2013 அன்று இரு

சக்கர வாகனத்தில் பயணம் செய்த அரசர்கோணம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவரின் மகன் ஜோதி ;

தூத்துக்குடி மாவட்டம், சங்கரப்பேரி கிராமம், எட்டையபுரம் பிரதான சாலையில் 14.11.2013 அன்று மிதிவண்டியில் சென்று கொண்டிருந்த மாப்பிள்ளையூரணி அரசு மருத்துவமனையில் பயிற்சி மருத்துவராகப் பணி புரிந்து வந்த மருத்துவர் திலீப் குமார் பதி;

–– ஆகியோர் அரசுப் பேருந்து மோதியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், டிரங்க் சாலையில் 28.10.2013 அன்று அரசுப் பேருந்து நிலை தடுமாறி தடுப்புச் சுவரில் மோதியதில், பேருந்தில் பயணம் செய்த வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், பாப்பேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தராஜிலு என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9